بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# A REPLY TO MOULAVI MOHAMED UMAR H.A

# மௌலவி முஹமது உமர் H.A.வுக்கு பதில்

## முன்னுரை (Preface)

மனித குலத்தின் வாழ்க்கைக்கு முழுமையான வழிகாட்டியாகும் தீனுல் இஸ்லாம். அந்த தீனுல் இஸ்லாமைப் பரிபூரணமாகப் பின்பற்றுகின்ற மனிதன் எவனோ அவன் நிரந்தரமான வாழ்வுக்கு தகுதி பெற்று விடுவான். அதாவது எளிதில் மோட்சத்தை அடைந்து விடுவான். மானிடகுலத்திற்காக அல்லாஹ் திருப்தியடைந்ததும் பலப்படுத்தியதும் பரிபூரணமாக்கியதுமான ஏகமார்க்கவும் அதுவே தான்.

நமது பூவுலகில் பலவகையான கொள்கைகளும் போதனைகளும் தத்துவங்களும் பரப்புகின்ற ஏராளமான மதங்களையும் இதர ஆத்மீக அமைப்புகளையும் இன்று காணமுடியும். ஆனால், அம்மதங்களில் இருந்தும் மற்று ஆன்மீக அமைப்புகளில் இருந்தும் இஸ்லாம் வேறுபட்டு நிற்பதற்கு காரணம் அதன் உயிர்கருத்து அல்லது அதன் உண்மைத்தத்துவம் இறுதிநாள் வரையிலும் நிலைநிற்கும் என்பதினாலாகும். இஸ்லாமின் அந்த உயிர் கருத்தை அல்லது உண்மை தத்துவத்தை பாரினில் நிலைநாட்டுவதோ அல்லாஹ்வில் இருந்து வருகின்ற அவனது தூதர்கள் மூலமாகத்தான் என்பது எவராலும் மறுக்கயியலாத ஒரு நிஜமாகும். ஆகவே புனிதமான தீனுல் இஸ்லாமில் அல்லாஹ்வின் ஏகத்துவத்தை எடுத்துரைத்து அதன்பால் மனுகுலத்தை அழைக்க இறைதூதர்களின் வருகை ஒரு உறுதியான விஷயமாக நமக்கு காணமுடியும்.

அதைப்பற்றி குர்-ஆன் இவ்வாறு தெரிவிக்கின்றது.

**''ஆதமுடைய மக்களே! உங்களிடம் உங்களில் இருந்தே (நம்) தூதர்கள் வந்து என் வசனங்களை உங்களுக்கு விளக்கினால் அப்போது எவர்கள் பயபக்திகொண்டு திருந்திக் கொண்டார்களோ அவர்களுக்கு அச்சமுமில்லை. அவர்கள் துக்கப்படவுமாட்டார்கள்''** (7:36).

**''நான் உங்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கொடுத்திருக்கின்றேன். பின்னர் உங்களிடம் இருப்பதை மெய்ப்பிக்கும் இறைதூதர்கள் உங்களிடத்தில் வந்தால் நீங்கள் அவர்மீது ஈமான் கொண்டு அவருக்கு உறுதியாக உதவி செய்ய வேண்டும்''** (3-82).

இறைதூதர்களின் வருகை அதாவது நபிமார்களின் தோற்றம் இஸ்லாமின் ஒரு சிறப்புதன்மையும் அதன் நடைமுறையுமாகும். அந்த சிறப்பான நடைமுறையை சந்தேகமின்றி நிரூபிக்கின்ற இறைவசனங்கள் மேல் சுட்டிக்காட்டியிருப்பது கூடாமல் திருமறையில் பலயிடங்களிலும் பார்க்க முடியும். அக் குர்ஆன் வசனங்களுக்கு ஒரு விளக்கமாக 1400 வருடங்களுக்கு முன்னவே தூதுவஅரசன் நபி(ஸ) அவர்கள் கூறிய ஒரு விஷயம் அபுதாவூதில் வந்துள்ள ஒரு ஹதீஸில் இடம் பிடித்துள்ளது. அது இவ்வாறாகும்.

நபி(ஸ) கூறினார்கள்.

**''இஸ்லாம் மதத்தின் சீர்திருத்தத்திற்காக ஒவ்வொரு நூற்றாண்டின் தலைப்பிலும் ஒவ்வொரு முஜத்தீதுகளை அல்லாஹ் அனுப்பி வைப்பான்'** (அபுதாவூத்). மேல்கூறிய குர்-ஆன் வசனங்களையும் திருநபி மொழியையும் நிரூபிக்கும் வகையில் அல்லாஹ்வே நேரடியாக நியமித்த சீர்த்திருத்தாளர்கள் ஒவ்வொரு நூற்றாண்டின் தலைப்பிலும், அவதரித்துக் கொண்டிருந்தார்கள். ஹிஜ்ரா 1-ம் நூற்றாண்டில் துவங்கிய அந்த இறை உதவி தொகுப்பில் அவதரித்த முதல் நாயகன் ஹஸ்ரத் உமறிப்னு அப்துல் அஸீஸ் ஆவார். அவரை தொடர்ந்து அவ்வரிசையில் 14-ம் நூற்றாண்டில் இஸ்லாமின் புரட்சி மன்னனாகவும் வாக்களிக்கப்பட்ட மஹ்தி மஸீஹாகவும் தோன்றியவரே ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது(அ) காதியானி. அதைபோன்றே இந்த 15-ம் நூற்றாண்டில் மார்க்கத்தை தூய்மைப்படுத்துவதற்காக அல்லாஹ்வே நேரடியாக அனுப்பி வைத்த மகாத்மா ஆவார் மௌரிஷியஸ் நாட்டை சார்ந்த ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அ). அவர் அந்த நற்செய்தியை கடந்த 13 ஆண்டுகளாக உலக மக்களிடம் அனுதினம் தெரியப்படுத்தி வருகிறார்.

மனித குலத்திற்கு நேர்வழிகாட்டிட இப்பூவுலகின் எல்லா திசைகளிலும் வரலாற்றிற்கும் அதற்கு அப்பார்பட்ட கால கட்டங்களிலும் ஏராளமான இறைதூதர்கள் தோன்றியிருந்தார்கள் என்று திருமறை

தெளிவாக கூறுகின்றது. உலக மக்களை சீர்திருத்தல் என்ற புனித புரட்சிக்காக இம்மண்ணில் தோன்றிய இறைதூதர்களின் எண்ணிக்கை திரு நபி(ஸ)வின் ஒரு திருக்கூற்றின் அடிப்படையில் சொன்னால் ஒரு லட்சத்தி இருபத்தி நாலாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் ஆவார்கள்.

மேற்கூறிய அனைத்து இறை தூதர்களும் அவர்களின் சமுதாயத்தின் துன்புறுத்தல்களுக்கும் இழிவுப்படுத்துதல்களுக்கும் அவதூறுகளுக்கும் ஆளானவர்களேயன்றி, ஒரு இறைத்தூதரைக் கூட அக்காலத்தின் மக்கள் அவருக்கு பூமாலை அணிவித்து அக்கொள்கையை ஏற்றுக்கொண்டதாக வரலாறில்லை. **''அவர்களுடைய தூதர்கள் அவர்களிடம் தெளிவான அத்தாட்சிகளுடன் வந்தபோது, அவர்கள் தங்களிடமிருந்த மிக குறைந்த அறிவைக்கொண்டு மகிழ்ச்சி அடைந்தன''** (40-84) என்று திருமறையில் கூறப்பட்டிருப்பதற்கு ஏற்றவர் இக்கால கட்டத்தில் இறைவனிடமிருந்து வருகை தந்திருக்கும் அவனது தூதனுக்கு எதிராக தங்களிடமுள்ள மிக அற்பமான அறிவைக்கொண்டு பல இஸ்லாமிக முல்லாக்களும், பேருவகை அடைந்து வருகின்றார்கள். அம்முல்லாக்களின் சங்கத்தில்பட்ட ஒருவரே ஆவார். அஹ்மதியா ஜமா அத்தை சாந்த மௌலவி முஹமது உமர் H.A அவர்கள்.

கேரளா மாநிலத்தில் இருந்து வெளியாகின்ற அஹ்மதியா முஸ்லீம் ஜமாஅத்தின் தலைசிறந்த பத்திரிகையாகும். **''சத்திய தூதன்''** என்ற மாத இதழ். அந்த பத்திரிகையில் 2010 டிசம்பர் மாதம் **''கிலாஃபத்தும் முஜத்தீதியத்தும்''** என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளிவந்தது. அஹ்மதியா முஸ்லீம் ஜமா அத்தின் நாயிப்நாசிர் ஆலாவாக பணியாற்றி வருகின்ற மௌலவி முஹமது உமர் சாஹிப் H.A அவர்கள் எழுதிய அக்கட்டுரையில் ''மஹ்தி மஸீஹீக்கு பின் தோன்றிய ஒரு கிலாஃபத் அமைப்பு இருப்பதால் இனி ஒரு முஜத்தீதுடையவோ, இறைதூதருடையவோ வருகை வீணானதே ஆகும்'' என்று வாதித்திருந்தார். மட்டுமல்லாமல் ''சூறத்துல் நூறில் நம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ் வழங்கியிருக்கின்ற கிலாஃபத் வாக்குறுதி, மக்களால் தேர்வு செய்கின்ற அஹ்மதியா கலீஃபாக்களை பற்றியதாகும்'' என்றும் தவறாக விளக்கி பாமர மக்களை ஏமாற்றவும், சீரழிக்கவும் முயற்சித்திருந்தார். அவரின் அவ்வாதவும், விளக்கவும், திருகுர் ஆனுக்கும் திருநபி வசனங்களுக்கும் ஹஸ்ரத் அஹ்மது(அ) மின் போதனைகளுக்கும் முற்றிலும் மாறானதாகும் என்பதில் சந்தேகமில்லை.

மஹ்தி மஸீஹீக்கு பின் தோன்றிய கிலாஃபத் அமைப்பு இருப்பதால் ஒரு முஜத்தீதுடையவோ இறைதூதருடையவோ வருகை வீணானதே ஆகும் என்ற வாதம் எவ்வளவு பரிகாசமான விஷயமாகும். அப்படியென்றால் ஹஸ்ரத் மூஸாமஸீஹுக்கு பிறகு தோன்றிய ஒரு கிலாஃபத் அமைப்பு நிலைநிற்கும் போது இறைதூதராகிய ஹஸ்ரத் முஹமது(ஸ) வுடைய வருகை வீணானதேயாகும் என்று கிறிஸ்தவர்கள் வாதம் செய்தால் அதை இந்த மௌலவி சாஹிப் ஒத்துக்கொள்வாரோ? அதை போன்றே, நபி(ஸ) வுக்கு பிறகு தோன்றிய கிலாஃபத் அமைப்பு இருக்கும்போது ஹிஜ்ரா 1-ம் நூற்றாண்டுமுதல் ஒவ்வொரு நூற்றாண்டிலும் அவதரித்த முஜத்தீதுகளின் வருகை பலனற்றது என்று இந்த மௌலவிசாஹிப் நம்பிவிடுவாரோ?. இந்த நூற்றாண்டின் இறைதூதரை பொய்ப்பிக்க ஆத்திரம் கொள்ளும் மௌலவிசாஹிப், அறிந்தோ அறியாமலோ நபி(ஸ) வைக்கூட பொய்ப்பிக்கின்றார்.

மௌலவி முஹமது உமர் சஹிபின் இத்தகை அடிப்படையற்ற வாதங்களுக்கும், விளக்கங்களுக்கும் இந்நூற்றாண்டில் (ஹிஜ்ரா 15) அல்லாஹ்வால் அனுப்பப்பட்டிருக்கும் முஜத்தீதும் கலீஃபத்துல்லாஹீம் இறை தூதரும் நபியும் என்று உரிமைக்கோரும் ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம்(அ) அவர்கள் ஆங்கில மொழியில் கொடுத்த பதிலாகும் தற்போது தமிழ்வடிவமாக்கப்பட்டிருப்பது. **இதை தமிழாக்கம் செய்திருப்பவர் மதிப்பிற்குரிய எனது அன்பு சகோதரனும், ஜமாஅத் சஹிஹில் இஸ்லாமின் உறுப்பினருமான ஜனாப் அப்துல் சுதீர் சாஹிப் ஆவார். அன்னாருக்கு அல்லாஹ் இம்மையிலும் மறுமையிலும் நற்பலனை வழங்குவானாக.** உண்மையை உணர்ந்து கொள்ள விரும்புகின்ற நடுநிலை உள்ளம் கொண்டோர்களுக்கு தவறான கொள்கைகளை கைவிட இப்பதில் வழிவகுக்கும் என்ற நம்பிக்கையோடு காலகட்டத்தின் இறைதூதரின் ஞானக்குரலை உங்கள் முன்னால் சமர்ப்பிக்கின்றோம். ஆமீன்

**-Azim Ahmad**
**Sadr Sahibul Faraj**

بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ

# A REPLY TO MOULAVI MOHAMED UMAR H.A

# மௌலவி முஹமது உமர் H.A.வுக்கு பதில்

மௌலவி சாஹிப் தன்னுடைய கட்டுரையில் பரிசுத்த குர்ஆனில் 24-ம் அதிகாரத்தின் 56-ம் வசனத்தை கூறுகின்றார். **“அல்லாஹ் உங்களில் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக ஆக்கியது போன்று இப்பூமியில் கலீஃபாவாக ஆக்குவதாகவும் அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும் அவன் அவர்களுக்கு அவர்களது அச்சத்திற்கு பிறகு அதற்கு பதிலாக அமைதியினை வழங்குவதாகவும் அவர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளான். அவர்கள் என்னை வணங்குவார்கள். எதனையும் எனக்கு இணையாக்கமாட்டார்கள். அதன் பின்னரும் நிராகரிப்பவர்கள் கட்டுபடாதவர்களாவார்கள்”.**

இந்த குர்-ஆன் வசனத்தில் அல்லாஹ் எவ்வகையிலான கலீஃபாக்களைப் பற்றி கூறியிருக்கின்றான்?. மஸீஹின் கலீஃபாக்களை குறித்தோ அல்லது அல்லாஹ்வின் கலீபாஃக்களை குறித்தோ?. இந்த வசனத்தில் அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக ஆக்கியது போன்று இப்பூமியில் கலீஃபாக்களை ஆக்குவதாக தெரிவிக்கின்றான். அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக ஆக்கியது போன்று என அல்லாஹ் கூறியிருப்பது எப்படிப்பட்ட கலீஃபாக்களை குறித்ததாகும்? அஹ்மதியா மௌலானா இந்த கேள்விக்கு பதில் கூற கடமைப்பட்டுள்ளார்.

மறைந்துபோன மஹ்தி மஸீஹின் குடும்பத்தில் நின்று வம்ச பாரம்பரியத்தை நிலைநாட்டுவதற்காக தோழர்களின் ஒரு சிறு கூட்டத்தில் இருந்து அவர்கள் விரும்புகின்ற ஒருவரை கலீஃபாவாக தேர்ந்தெடுப்பது. மேல் வசனத்தில் அல்லாஹ் கூறியிருப்பது, இவ்வாறு மனித கரங்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற கலீஃபாக்களை பற்றியதோ? அல்லது அல்லாஹ் அவனே நேரடியாக நியமிக்கின்ற கலீஃபாக்களை பற்றியதோ? எப்போதெல்லாம் இறைமார்க்கத்தில் இருந்து மனிதர்கள் தடம் மாறி சென்று, இறையருள்களை பெற்றுகொள்வதற்கான வழி தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கலீஃபாக்கள் மூலமாக கிடைக்கும் என்று எண்ணுவதும் அப்படி அந்த கலீஃபாக்கள் அதிகாரவும் அந்தஸ்தும் அனுபவிப்பதுடன் தங்களின் அதிகார ஆதிக்கம் குடும்பநபகர்களின் கைப்பிடியிலாக்க தயாராகவும் செய்கின்றார்களோ அப்போதெல்லாம் அல்லாஹ்வே நேரடியாக ஏற்படுத்துகின்ற கலீஃபாக்கைளைப் பற்றியதல்லவா மேல் கூறிய இறைவசனம்?

இந்த மௌலவி கண்டிப்பாக பதில் கூற வேண்டும். அவர்களின் முன்னோர்களில் இருந்து எழுப்பப்பட்ட கலீஃபாக்களின் பெயர் வகைகள் யாவை? பரிசுத்த குர்ஆனையும் திருநபி வசனங்களையும் அடிப்படையாக்கிகொண்டு பதில் கூறுங்கள். அவர்களின் முன்னோர்களில் இருந்து கலீஃபாக்களை ஆக்கியது போன்று என்று திருமறை கூறிய கலீஃபாக்களை தேர்ந்தெடுக்கப்பட்டது எவ்வாறு? இவ்வுலக நடைமுறைகளின்படி மனிதர்களால் வாக்களித்து தேர்வு செய்கின்ற கலீஃபாக்கள் ஆகியிருந்தார்களா அவர்கள்? பௌதீகமான நடைமுறைகளின்படி மனித கரங்களால் கலீஃபாக்களை தேர்ந்தெடுக்கின்ற வழக்கம் முன் சமுதாயங்களில் இருந்ததா?

தாங்கள் உலுல் அல்பாப் ஆக இருந்தால், இறைமார்க்க தரிசனத்தை குறித்து எல்லாம்

அறிந்தவன் என்று எண்ணும் மானிடா அல்லாஹ் உங்களின் கண்களிருந்து அறியாமையின் திரையினை நீக்கி தருவானாக! தங்களுடைய கட்டுரையில் தாங்கள் பிரதிபாதித்துள்ள சூறத்துல் நூறில் கூறப்படுகின்ற உண்மையான நூர் (ஒளி)யை தரிசிக்க உங்களுக்கு அல்லாஹ் வழி வகுப்பானாக. இறைவனே நேரில் தேர்ந்தெடுத்து கலீஃபத்துல்லாஹ் என்ற உன்னதமான பதவியில் நியமித்து, மிக பெரிய பொறுப்புகளை ஒப்படைத்திருக்கும் ஆள் என்ற நிலையில் பரிசுத்த குர்ஆனில் கூறப்படுகின்ற கிலாஃபத் அமைப்பின் நிஜமானத் தத்துவத்தை நான் உங்களுக்கு விளக்கித்தருகின்றேன்; கேட்டுக்கொள்ளுங்கள்.

இஸ்லாமின் மிகச்சிறந்த தத்துவங்களில் ஒன்றைக் குறித்தேயாகும் இந்த வசனம். இந்த வசனம் அடங்கியிருக்கும் சூறத்தூல் நூர் மிக சிறப்புகளுடைய ஓர் அதிகாரம் ஆகும். குர்-ஆனின் மற்று அதிகாரங்களை ஒப்பிட்டு இந்த அதிகாரத்தில் நல்லொழுக்கம், சமுதாயம், அரசியல் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளைப்பற்றி இஸ்லாமின் நோக்கத்தின் அடிப்படையில் விளக்கம் வழங்கப்பட்டிருக்கின்றன. சில முன் அதிகாரங்களில் நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கின்ற அழகான எதிர்காலம் எவ்வாறு நடைமுறையில் வரும் என்பதும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆன்மீக அளவிலும் பௌதீக அளவிலுமான இஸ்லாமின் முன்னேற்றவும் வெற்றியும் அல்லாஹ்வின் கலீஃபா மூலமாகவே நடைமுறையில் வரும் என்ற செய்தி 36-ம் வசனத்தில் மறைந்திருக்கின்றது. 56-வது வசனத்திலாகட்டும் கலீஃபத்துல்லாஹ் (அல்லாஹ்வின் கலீஃபா) என்ற விஷயத்தை மிக்க உறுதியுடனும் சந்தேகத்திற்கு இடமின்றியும் விளக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் துரதிர்ஷ்டம் என்று செல்லலாம், இந்த குர்ஆன் வசனங்கள் தங்களுடைய கலீஃபாக்களாக அவர்களே தேர்ந்தெடுத்த நபர்கள் என்று அஹ்மதிகள் எண்ணிக்கொள்கின்றார்கள்.

56-வது வசனத்திற்கு முன் வருகின்ற சில வசனங்கள் (52 முதல் 55 வரை) இவ்விஷயத்தில் தொடர்ந்து முன்னேற்றம் அடைவதை காணலாம். அல்லாஹ்வுடனும் திரு நபி(ஸ) வுடனும் உள்ள கீழ்படிதன் முக்கியத்துவத்தை குறித்து தொடராக எடுத்துக் கூறியிருக்கின்றது. இஸ்லாமில் அல்லாஹ்வுடைய கலீஃபாக்களின் பதவியும் அந்தஸ்தும் வெளிப்படுத்தி தருவதேயாகும் இது. குறிப்பாக, அல்லாஹ்வின் கலீஃபா என்ற நிலையில் நான் அல்லாஹ்வுக்கும் திரு நபி(ஸ) வுக்கும் பரிபூரணமாக கட்டுப்பட்டவனாவேன்.

இந்த குர்ஆன் வசனம் (24:56) இன்னும் சில விஷயங்களை எடுத்துக் கூறுகின்றது. அல்லாஹ்வின் இந்த வாக்குறுதியின் விடியல், முஸ்லீம்கள் பொதுவாக ஆற்றவேண்டிய நற்செயல்களுடன் தொடர்புடையதாகும். அனுதின இறைவணக்கவும், ஸக்காத்து வழங்குதலும், இறைதூதர் நபி(ஸ) மாவோடு முழுமையான கட்டுப்படுதலும், லௌகீக அளவிலும், ஆன்மீக அளவிலும் செய்ய வேண்டிய கடமைகளும் அதில் உட்பட்டிருக்கின்றது. இந்த நிபந்தனைகள் அனைத்தும் கடைப்பிடிக்கும் நேரத்தில் அல்லாஹ்வின் கலீஃபாவை அல்லாஹ்வே தேர்ந்தெடுப்பான். அவரை சமுதாயத்தின் தலைவராக நியமிக்கவும் அவர்களுடைய அச்சத்திற்கு பிறகு அவர்களுக்கு அமைதியினை வழங்குவான்.

இஸ்லாம் எல்லா தத்துவ சிந்தனைகளின் மேல் வெற்றி பெறும். அத்தோடு இஸ்லாமின் அடிப்படையான கொள்கை அல்லது இறைவனின் ஏகத்துவம் மிக தெளிவாக அமைக்கப்படும். அல்லாஹ்வின் கிலாஃபத் அமைப்பு உருவாகும் என்ற வாக்குறுதியின் மலர்ச்சி கலீஃபத்துல்லாஹ்வின் வருகையுடன் தொடர்பு பெற்றிருக்கின்றது என்பதில் எவ்வித ஐய்யமுமில்லை. தூதுவ மன்னன் முஹமது(ஸ) முழுமானிட குலத்திற்கும் வழிகாட்டியாக இருப்பதால் அவருடைய கிலாஃபத் ஒரு வகையில் அல்லது மற்றொரு வகையில் இறுதிநாள்

வரையிலும் தொடர்ந்து கொண்டிருக்கும். அல்லாஹ்வின் இப்புனித அருள் ஹஸ்ரத் முஹமது(ஸ) வின் அந்தஸ்தையும் அதிகாரத்தையும் மற்று இறைதூதர்களிருந்தும் நபிமார்களிருந்தும் மேன்மைப்படுத்தி காட்டுவது ஆகும். முனீர் அஹ்மது அஸீம் என்ற நபர் மூலமாக நமது இந்நூற்றாண்டு சாட்சியாகயிருப்பதும் நபி பெருமான்(ஸ) வுடைய கலீஃபத்துல்லாஹ்வை தான்.

புனித குர்-ஆன் மூன்று வகைபட்ட கலீஃபாக்களைப் பற்றி எடுத்துரைக்கின்றது. திருமறையின் பாடங்களுக்கு உகந்த முறையில் அம்மூன்று வகையான கலீஃபாக்களைக் குறித்து விளக்குவதற்கு நான் இந்த முல்லாக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். இந்த கலீஃபாக்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களா அல்லது அல்லாஹ்வே அவனது வெளிப்பாடுகளை இறக்கி அவனே நேரடியாக நியமிக்கப்பட்டவர்களா என்பதை குறிப்பாகவும் அவர்கள் விளக்க வேண்டும். கலீஃபத்துல்லாஹ்வும் முஜத்தீதும் மறைந்து போன மஸீஹின் கலீஃபாக்களை பின்பற்ற வேண்டும் என்று தாங்கள் மறைமுகமாக கூறுவதாக இருந்தால், அதாவது மனிதர்களால் தேர்ந்தெடுத்த அஹ்மதியா கிலாஃபத் நிலைநிற்பதால் ஒரு முஜத்தீதின் வருகை வீணானதே ஆகும் என்ற வாதத்தில் தாங்கள் உறுதியுடன் நிற்பவரென்றால், அக்கருத்தின் அடிப்படையை திரு குர்-ஆன் வசனங்கள் மூலமாக காட்ட வேண்டும்? ஆதரவும் விளக்கவும் தர வேண்டும். அல்லாஹ்வின் பார்வையில் வெகுமதியுடயவராக இருப்பவர், மனித கரங்களால் தேர்ந்தெடுக்கின்ற கலீஃபாவோ அல்லது அல்லாஹ்வோ நேரடியாக தேர்ந்தெடுக்கின்ற கலீஃபாவோ? இஸ்லாமின் சீர்திருத்தத்திற்கும் மனித குலத்தை ஏகத்துவ கொள்கையின்பால் வழிநடத்தி செல்வதற்கும் ஒரு கலீஃபத்துல்லாஹ் இருப்பதல்லவா மிக முக்கியத்துவம் வாய்ந்தது?.

மஸீஹின் அஞ்சாவது கலீஃபாவாக தேர்ந்தெடுத்திருக்கும் இப்போதைய அஹ்மதியா ஜமாஅத்தின் கலீபா அப்பதவியில் நியமிக்கப்பட்டு தற்பொழுது ஏழு ஆண்டுகள் நிறைவாகின்றது. இந்த ஏழு வருடகாலயளவில் அவருக்கு அல்லாஹ்விருந்து வெளிப்பாடுகள் எதாவது கிடைக்கப்பட்டிருக்கின்றதா? கிடைத்திருந்தால் அதை வெளிப்படுத்த வேண்டும். கிடைப்பதில்லை என்றால் அதற்கு காரணம் என்ன?

அல்லாஹ்வின் கலீஃபாக்களுடையவும் முஜத்தீதுகளுடையவும் வருகையின் நோக்கம் இஸ்லாமின் சட்டதிட்ட போதனைகளை பாதுகாக்கவும் தடம்புரண்டு போன மானிடர்களை இறை பாதையில் வழிநடத்தவும்ஆகும் என்ற உண்மையை திருமறைமூலமாக உணர்ந்து கொள்ளலாம்.

உலகெங்குமுள்ள இன்றைய அஹ்மதிகள் அவர்களின் கலீஃபத்துல் மஸீஹை ஒரு பிம்பமாக எண்ணி **சீர்க்கு** செய்கின்றார்கள். அது போன்றே அரேபியன் மக்கள் முற்றிலும் பிம்ப வணக்கத்திலும், இஸ்லாம் பலவீனமாகவும் இருந்த காலத்தில் வெளிப்பட்ட இந்த குர்-ஆன் வசனத்தில் (24:56) ஒரு தீர்க்கதரிசனம் அடங்கியிருக்கின்றது. அஹ்மதிகள் இப்போது இறைவசனத்தையோ நபி மொழியையோ குறித்து சிந்திப்பதில்லை. அவர்களை பொறுத்தவரை வாக்களிப்பு நடத்தி அவர்களே தேர்ந்தெடுத்திருக்கின்ற கலீஃபாவின் வார்த்தைகளுக்கும், கட்டளைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். நிச்சயமாக இஸ்லாமின் பாடங்களும் அதன் சட்டதிட்டங்களும் இந்த முல்லாக்களின் கால்களால் எட்டி மிதிக்கப்பட்டிருக்கின்றது. இந்த முல்லாக்களாகட்டும் அவர்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்காக அல்லாஹ் நியமித்துள்ள கலீஃபாவை நிராகரிக்கவும் அவர்கள் தேர்ந்தெடுத்த கலீஃபாவை ஒரு மாபெரும் சக்தியாக எண்ணவும் செய்கின்றன. இஸ்லாமின்

ஆரம்ப காலகட்டத்தில் அரேபியாவில் முஸ்லீம்கள் மிக அரிதாகவே காணப்பட்டனர். ஏராளமான பிரச்சினைகளை சந்திக்க நேர்ந்த அவர்கள் தங்களுடைய உயிர்களையே அஞ்சினர். என்றிருந்தாலும் இந்த குர் ஆன் வசனம் (24:56) ஒரு தலைமுறைக்குள் பரிபூரணமாக நிறைவேறப்பட்டது. சிலை வணக்கம் அரேபியாவில் நின்று மாய்ந்து போனது. இஸ்லாம் அரேபியாவில் மட்டுமல்லாமல் உலகின் பல்வேறு நாடுகளிலும் பரவியது. ஒரு காலத்தில் ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்று எண்ணிய முஹமது(ஸ)வின் தோழர்கள் பிற்காலத்தில் உலகத்தலைவர்களாகவும் தத்துவமேதைகளாகவும் மாறினர். அதற்கு பிறகு எவரொருவர் அவநம்பிக்கை கொள்கின்றார்களோ அவர்கள் அக்கிரமகாரிகள் ஆவார்கள் என்ற இறை வசனம் தெரியப்படுத்துவது, ஒரு கலீஃபத்துல்லாஹ்வின் வருகை மாபெரும் அருள் என்றாகும். அல்லாஹ்வே நேரடியாக நியமிக்கப்படுகின்ற ஒரு கலீஃபாவின் தோற்றம் இல்லாதவரையில் முஸ்லீம் சமூகத்தில் சகோதரத்துவம், ஒற்றுமை, நட்புறவு இவையாவும் உருவாகுவது எளிதல்ல. இறைவனின் தூதனை புறக்கணித்துக் கொண்டு ஒரு பொழுதும் ஒற்றுமை நிலைநாட்ட இயலாது. பொதுவாக முஸ்லீம்களும் குறிப்பாக அஹ்மதிகளும் இந்த நூற்றாண்டில் அவதரித்த கலீஃபத்துலாஹ்வை பற்றி தெரிந்துக் கொள்ள ஆர்வம் காட்டவில்லையென்றால், அவரை ஏற்றுக்கொள்ளாமலும் அவருக்கு உதவி செய்யாமலும் வாழ்ந்தால் அவர்களில் நின்று இம்மாபெரும் அருளை இறைவன் அகற்றிவிடுவான். மட்டுமல்லாமல் அல்லாஹ்வின் கோபத்திற்கு அவர்கள் ஆளாக்கப்படுவார்கள் என்பதிலும் சந்தேகமில்லை.

ஏய் முல்லாக்களே இந்த குர்-ஆன் வசனத்தின் (24:56) சுருக்கம் இதுவாகும். இஸ்லாமின் தோழர்களுக்கு இவ்வுலகில் ஆட்சியும் உயர்பதவியும் வழங்கப்படும். மானிடகுலத்திற்கு முன்மாதிரிகையான தலைவர்களாக அவர்கள் விளங்குவார்கள். இதை எவராலும் மாற்ற முடியாத இறைவிதியாகும். இந்த இறைவிதியை மாற்றியமைக்க முற்படும் எதிராளிகளின் முயற்சிகள் யாவும் தோல்வியை சந்திக்கும். அல்லாஹ்வின் ஒரு கலீஃபாவோ முஜத்தீதோ இஸ்லாமிக உலகில் ஒரு ஆளும் சக்தியாக இருக்கும் காலம் வரையிலும் முஸ்லீம்கள் அஹ்மதிகள் கூட வெற்றியில் நின்று வெற்றியை நோக்கி முன்னேறுவார்கள்.

இறையறிவிப்பின் படி கூறுகின்றேன் நான் இந்நூற்றாண்டின் முஜத்தீது ஆவேன். நான் மட்டுமே இந்த நூற்றாண்டுக்காக அனுப்பப்பட்டிருக்கின்ற முஜத்தீது என்ற செய்தியை மிக தெளிவாக விளம்பரப்படுத்தியிருக்கின்றேன். இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் (2001) என்னை அஹ்மதியா ஜமாஅத்தின் அமைப்பிருந்து வெளியேற்றினார்கள். அதற்கு காரணமென்ன? எனக்கு இறைவெளிப்பாடுகள் கிடைக்கின்றது என்ற ஒரேயொரு காரணம் தான். நுபூவத்தின் வாசல் இப்போதும் திறந்தே கிடக்கின்றது என்றும், அது இறுதிநாள் வரையிலும் திறந்தே கிடக்கும் என்றும் கூறுவதற்கு அஹ்மதியா ஜமா அத்திற்கு நூறு ஆண்டுகள் தேவைப்பட்டது. திரு குர்-ஆனும் திருநபியின் நற்செய்தியும் என்றென்றும் நிலைநிற்பதால் பூவுலகில் வாழும் முஸ்லீம்களை மட்டுமின்றி மானிட குலத்தை முழுவதும் சீர்திருத்த ஒரு கலீஃபாவின் தேவையை கண்டறிந்த அல்லாஹ் அவனது கலீஃபத்துல்லாஹ்வை அனுப்பி வைத்தான். அப்போது, இறைவெளிப்பாடுகள் எக்காலவும் நம்மோடு இருக்கும் என்று கூறி வந்தவர்களே (அஹ்மதிகள்) இன்று சுன்னிமுஸ்லீம்களுடையவும் மற்றுமுள்ளவர்களுடையவும் பாதச்சுவடுகளை பின்பற்றிக்கொண்டு இறைவெளிப்பாடின் வாசலை அடைத்துவிட்டார்கள். அவர்களின் இப்போதைய விளக்கங்கள் ஆகட்டும் குர்-ஆனுக்கும் இஸ்லாமுக்கும் அப்பாற்பட்டதேயாகும்.

ஆனால் இத்தருணத்தில் மிக தெளிவாக நான் கூறிக்கொள்கின்றேன். எல்லாம் வல்ல

அல்லாஹ் அவனது திருமறையில் உரைத்திருப்பது போன்றே வெளிப்பாடுகளின் வாசல் என்றென்றும், திறந்தே இருக்கும். எனக்கு பிறகும் இச்செயல் தொடரும். ஒவ்வொரு காலத்திற்கும் இறைவனால் தேர்ந்தெடுத்து அனுப்பப்படுகின்ற மகாத்மாக்கள் வருவார்கள். அல்லாஹ் அவர்களில் அவனது வெளிப்பாடுகளின் அருள்களை போர்த்தி இஸ்லாமின் மேன்மையை கட்டி காப்பான். இவ்விதம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் அல்லாஹ் அவனது கிலாஃபத்தை நிலைநாட்டுவான். இறுதியில் இஸ்லாம் அதன் ஒளியை முழு உலகிலும் பரவசெய்யும். பிறகு ஒரேயொரு சமுதாயம் உம்மத்தே வாஹிதா மட்டும் எஞ்சும். பூமியில் ஆன்மாக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து அல்லாஹ்வின் மேன்மையை புகழ்பாடி, அவனது ஏகத்துவத்தை எடுத்துரைக்கும் நாள் மிக சமீபமேயாகும். ஆனால் அதற்குமுன் அல்லாஹ் தேர்ந்தெடுக்கின்ற அவனது நல்லடியார்கள் தோற்றுவார்கள். இறுதி வெற்றிக்கான அவர்களுடைய சேவைகளை அவர்கள் செய்வார்கள் என்பதும் உறுதி.

**“துதர்களாகிய நம் அடியார்களை குறித்து நம் தீர்ப்பு ஏற்கனவே நிகழ்ந்து விட்டது. நிச்சயமாக அவர்களுக்கே உதவி அளிக்கப்படும். எமது படையினராகிய நம்பிக்கையாளர்களே கட்டாயம் வெல்வார்”** (37-172,174).

நிச்சயமாக, அல்லாஹ் என்னை ஒரு நல்லடியானாக படைத்து முஜத்தீதின் ஆடையை போர்த்தி இந்நூற்றாண்டின் கலீஃபத்துல்லாவாக அனுப்பியுள்ளான். ஆனால் அஹ்மதியா உலமாக்களும் அஹ்மதியா கலீஃபாவும் இக்காலத்தின் மற்று முஸ்லீம் உலமாக்களை போன்று, நபிமார்கள் தோன்றுகின்ற காலகட்டங்களில் முன் காலமக்கள் எவ்வகையில் செயல்பட்டார்களோ அவ்வாறே இவர்களும் என்னை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். அல்லாஹ் என்னை சீர்திருத்தாளரின் ஆடை போர்த்தியிருக்கின்றான். நிச்சயமாக நான் இந்த காலகட்டத்தின் முஜத்தீத் ஆவேன். நான் மனித கரங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவனல்ல.

**நான் முஜத்தீதும் கலீஃபத்துல்லாஹ்வும் ஒரு நிலையில் நபியுமாக அனுப்பப்பட்டிருக்கின்றேன். நான் முழுமை வாய்ந்த நபியல்ல. (சுதந்திர நுபூவத்தல்ல) ஆனாலும் நான் நபியாவேன். வானங்களையும் பூமியையும் படைத்த இறைவன் என்னோடு பேசுகிறான். எனக்கு அவனில் இருந்து இறை அறிவிப்புகள் கிடைக்கின்றது. இறை ரகசியங்களை அவன் எனக்கு வெளிப்படுத்தி தருகின்றான். இறை தூதர்களுக்கு கிடைக்கின்ற வெளிப்பாடுகள் சாத்தானின் ஆதிக்கத்தில் இருந்து முழுமையாக பாதுகாக்கப்பட்டவையாகும். எனக்கும் அதுபோன்று தூய்மைபெற்ற வெளிப்பாடுகளே கிடைக்கின்றது.** இத்தகை விஷயங்களை புரிந்துக் கொள்ள அல்லாஹ்வை உங்களுக்கு உதவி செய்வானாக. நமது நம்பிக்கை, காத்தமுன் நபியீன் என்ற அருள் சமுத்திரத்திருந்து எப்போது வேண்டுமென்றாலும் நபிமார்களுக்கு தோன்றலாம் என்பதேயாகும். இவ்வாறு தோன்றுகின்ற நபிமார்கள் மூலமாக எதிர்கால விஷயங்களைக் குறித்து நற்செய்தியும் எச்சரிக்கையும் வழங்கப்படும். அல்லது குர்-ஆன் வசனங்களுடைய நுட்பமான அறிவும் தூய்மையான ஞானங்களுடைய அகப்பார்வையும் கிடைக்கும். வேறொன்றும் இல்லை அதாவது சுதந்திர நுபூவத்தோ புதிய சரியத்தோ இருக்காது. மேய் மாதம் 26-ம் தேதி எனக்கு கிடைத்த ஒரு வெளிப்பாடானது நபித்துவ முறையிலுள்ள **“கலீஃபத்துல்லாஹ்”** என்றாகும்.

ஜமா அத்துச் சஹிஹில் இஸ்லாமில் இணைந்திருக்கும் எனது சகோதர சகோதரிகளே, குழந்தைகளே நான் உங்களிடம் உறுதியாக கூறுகிறேன். அல்லாஹ்வுக்காக தங்களுடைய உயிரை மாய்த்துக்கொள்ள ஆயத்தமாகின்றோர்கள் ஒருபொழுதும் உயிரை இழப்பதில்லை. அதற்கு அல்லாஹ் அனுமதிப்பதில்லை. தியாகத்தின் ஆத்மாவை தங்களில் குடிவைத்திருக்கும் எந்த ஒரு சமுதாயவும் சீரழிந்து போவதில்லை. என்றென்றும் உயிருள்ள

சமுதாயமாக அவர்கள் மாறுவார்கள். கடந்த காலங்களில் இது போன்றே அமைந்தது. இனிவருகின்ற காலங்களிலும் அப்படியே அமையும். இன்ஷா அல்லாஹ். எதிராளிகளை கண்டு பயந்து ஓடும் சமுதாயத்தில்பட்டவர்களல்ல நாம். இன்ஷா அல்லாஹ் எதிராளிகளின் ஒவ்வொரு அறைகூவலுக்கும் நாம் பதிலளிப்போம். உண்மையின் பகைவர்கள் எடுக்கும் ஆயுதங்கள் நமக்குரியவையல்ல. அவர்களின் பேச்சுவார்த்தை முறைகளும் நமக்கு சேர்ந்ததல்ல. பகையுடையவும் வெறுப்புடையவும் நெருப்புக்கு எண்ணை ஊத்த அவர்கள் அனுதினம் முயற்சிசெய்வார்கள். ஆனால் நாமோ நட்பின் விழிநீர்களால் அந்த நெருப்பை அணைத்துவிட முயற்சி செய்வோம். நம் இதயங்களை கிழித்து எறிய அவர்கள் அம்புகளை ஏவுவார்கள். ஆனால் நாமோ நடுநிசிகளில் துஆவின் அம்புகளை விண்ணில் ஏவுகின்றோம்.

**நான் இவ்வாறு துவா செய்தேன். அல்லாஹ்வே என்னுடைய ஒவ்வொரு வார்த்தையையும் சஹிஹில் இஸ்லாமின் வார்த்தையாக மாற்றுவாயாக. ஒவ்வொரு சஹிஹில் இஸ்லாமின் இதயதுடிப்பையும் என்னுடைய இதய துடிப்பாக ஆக்குவாயாக. ஒவ்வொரு நபரிலும் உன் தீனுக்கு சேவை புரிகின்ற உள்ளபூர்ணமான உணர்ச்சியை அளிப்பாயாக. நபி அரசன் முஹமது(ஸ) வின் ஒளியின் பால் எல்லா பகுதிகளிலும் வாழும் மக்களுக்கு அழைப்பு விடுக்க அவர்களை ஆயத்தப்படுத்துவாயாக. நெருப்பில் எரிக்கப்பட போகின்றோம் என்ற உண்மையை மறந்து அதன் ஒளியில் விரைந்து செல்லுகின்ற பூச்சிகளை போன்று முஹமது நபி(ஸ) அமைத்த ஒளியின்பால் முழு மனித குலத்தையும் பாசக்கயிற்றில் இழுத்து ஒன்றிணைப்பாயாக. அல்லாஹ்வே இதை செய்வாயாக.**

**"நீ என்னுடையதாகும் நேரம், முழு உலகவும் உன்னுடையதாகும்".** இது எனக்கு பிரஞ்சு மொழியில் கிடைத்த வெளிப்பாடாகும். இந்த இறைவசனத்திற்கேற்ப நீங்கள் செயல்பட்டால் அது உண்மையென புரியவரும். இன்ஷா அல்லாஹ். இறுதியாக நான் மௌலவிகளிடம் கூறுகிறேன். எனது ஆன்மீக தந்தை ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அ) அவர்கள் மிக அழகாக வெளிப்படுத்தி தந்த ஒரு கருத்தின்பால் சிந்தித்துக் கொள்ளுங்கள்.

**"கலாம் மஸீஹினுடையதாகும் மற்றொருவருடையதுமல்ல. நான் வரவில்லையென்றால் மற்றொருவர் வந்திருப்பார்".**

உண்மையின் பாதையில் பயணம் செய்கின்றோர்களுக்கு சாந்தி உண்டாகட்டும்.

1432 முஹர்ஹம் 12
2010 டிசம்பர் 19

எளியவன்
முனீர் அஹ்மது அசீம்
Hazrat Khaleefathullah,
Al Maseeh Al-Mauoodu
www.jamaat-ul-sahih-al-islam.com

Translated by
**Abdhul Sudheer**

Issued by R. Jamaludin Raother Amir
Jamaat Ul-SahihAl Islam, Kerala (Regd) India.
Email: jamal.raother@gmail.com
Web: www.jamaat-ul-sahih-al-islam.com
09447001832

**Proof Reader**
**Azim Ahmad**
**Sadr Sahibul Faraj**
**09789180817**